*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*06 03 2026 FRIDAY 7 15 AM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. இந்தியா - ஃபின்லாந்து இடையே வலுவான நட்புறவு நிலவுவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. நாகாலாந்து, மிஸோரம், திரிபுரா மாநிலங்களுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பயணம் மேற்கொள்கிறார்.

3. நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

4. தெலங்கானா, மஹாராஷ்ட்ரா, மேற்குவங்கம், நாகாலாந்து, பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஆளுநர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

புதுதில்லி வந்துள்ள பின்லாந்து அதிபர் டாக்டர் அலெக்சாண்டர் Stubb, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசினார்.

Raisina மாநாட்டில் பங்கேற்பதற்காக பின்லாந்து அதிபர் இந்தியா வந்திருப்பது பெருமைக்குரியது என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

பின்லாந்து, இந்தியாவின் நம்பிக்கைகுரிய நட்பு நாடு என்றும், நீண்டகால ஜனநாயக நடைமுறைகளை இருநாடுகளும் பகிர்ந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொருளாதார ஒத்துழைப்பு, தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்திய – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, பின்லாந்து அதிபர் Alexander Stubb, பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், ராணுவ நடவடிக்கை மூலம், எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது என்றும், பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இருநாடுகளும் உறுதியுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுக்ரைன் மற்றும் மேற்காசிய பகுதிகளில் போர் நிறுத்தம் தொடர்பான முயற்சிகளுக்கு இரு நாடுகளும் முழு ஆதரவு அளிக்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்தியா – பின்லாந்து நாடுகளுக்கு இடையே சுற்றுச்சூழல், ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மூன்று நாள் பயணமாக நாகாலாந்து, மிஸோரம், திரிபுரா மாநிலங்களுக்கு செல்கிறார்.

இன்று நடைபெறவுள்ள நாகாலாந்து பல்கலைக் கழகத்தின் 8வது பட்டமளிப்பு விழாவில் அவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

நாளை மிஸோரம் செல்லும் அவர். ஐஸ்வாலில் உள்ள மிஸோரம் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்கிறார்.

பின்னர், திரிபுரா செல்லும் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், அகர்தலாவில் நடைபெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இடம்பெற்றுள்ள சுயஉதவி குழுக்களின் அரங்குகளை பார்வையிடுகிறார்.

>>>>><<<<<

தெலங்கானா, மஹாராஷ்ட்ரா, மேற்குவங்கம், நாகாலாந்து, பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஆளுநர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிக்கையை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ளார்.

தெலங்கானா மாநில ஆளுநராக திரு. ஷிவ் பிரதாப் சுக்லாவும், மஹாராஷ்ட்ர மாநில ஆளுநராக திரு. ஜிஷ்ணு தேவ் வர்மாவும், மேற்குவங்க மாநில ஆளுநராக திரு. ஆர்.என். ரவியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பீகார் மாநில ஆளுநராக ஓய்வு பெற்ற லெப்டினென்ட் ஜென்ரல் திரு. Syed Ata Hasnain நியமிக்கப்பட்டுள்ளார்.

கேரள மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் ஹர்லேக்கருக்கு, தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாகாலாந்து மாநில ஆளுநராக திரு. Nand Kishore Yadav-ம், ஹிமாச்சலப்பிரதேச ஆளுநராக திரு. Kavinder Gupta-வும் நியமிக்கப்பட்டுள்ளார்.

லடாக் யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநராக திரு. வினெய்குமார் சக்சேனாவும், தில்லி துணை நிலை ஆளுநராக திரு. Taranjit Singh Sandhu-வும் நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவிவரும் நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் விமானப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழல், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் சர்வதேச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும், போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பல்வேறு உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

கத்தாரில் வசிக்கும் இந்தியர்களுக்கு உதவிடும் வகையில், தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் தொடர்ந்து செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு வசிக்கும் இந்தியர்களின் அவசரகால உதவிக்காக தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக, உலக அளவில் கச்சா எண்ணெயின் விலை 2 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதனிடையே, மத்திய ஆசியாவில் நிலவும் பற்றமான சூழல் கவலை அளிப்பதாக உள்ளது பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதுகுறித்து பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனிடம் ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீண்டும் கொண்டு வருவதற்கு, இந்தியா, பிரான்ஸ் நாடுகள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருவதாக பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. சையத் அப்பாஸ் Araghchi மற்றும் ஓமன் நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Albusaidi—யுடனும், மத்திய ஆசியாவில் நிலவிவரும் சூழல் குறித்து, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தொலைபேசி வாயிலாக விரிவான ஆலோசனை நடத்தினார்.

>>>>><<<<<

போர்ச்சுக்கல் துணை அதிபர் திரு. Marcos Perestrello தலைமையிலான நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு, மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹர்வன்ஸை, புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின் போது, இந்தியா - போர்ச்சுக்களல் இடையே வலுவான நட்புறவையும், வரலாறு மற்றும் கடல்சார் ரீதியிலான நீண்ட கால தொடர்புகளையும் கொண்டுள்ளதாக திரு. ஹர்வன்ஸ் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியிலான உறவுகள் ஏற்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

நீதித் துறையின் மீது மக்கள் நம்பிக்கையும், மரியாதையும் வைத்துள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், திருப்பதியில் புதிய மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், உரிய நேரத்தில் நீதி வழங்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் வலுவான வாதங்களை எடுத்துரைக்க வேண்டும் என்றும் தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஆந்திர பிரதேச கடலோரப் பகுதிகள், ஏனாம், குஜராத் மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், கோவா, கொங்கன் ஆகிய பகுதிகளில் இன்று கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை காட்டிலும், 4 முதல் 6 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டின் மத்தியப் பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் பன்முக கலாச்சாரம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், மத்திய கலாச்சார அமைச்சகத்தின் மேம்படுத்தப்பட்ட இணையதளம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

புதுதில்லியில் உள்ள கடமை மாளிகையில் இந்த புதுப்பிக்கப்பட்ட இணையதள சேவை தொடங்கி வைக்கப்பட்டது.

இதன்மூலம், ஆராய்ச்சியாளர்கள், துறை சார்ந்த நிபுணர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும், டிஜிட்டல் முறையில் நாட்டின் தொன்மையான கலாச்சாரம் குறித்த தரவுகளை அறிந்து கொள்ள முடியும்.

கையெழுத்துப் பிரதிகள், பழமையான ஆவணங்கள், அரியவகை புத்தகங்கள், ஓவியங்கள் உள்ளிட்டவை இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பெர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-23, 21-10 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Ng Ka Long Angus-ஐ வென்றார்.

>>>>><<<<<

சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சோனாலி சிங் - Likhith Srivastava இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-18 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Nichole Chau - Amanda Yap இணையை வென்றது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் Nayana OASIS - Varshini VISWANATH SRI இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கௌஷல் தர்மேந்தர், சமர்வீர், Hmar LALTHAZUALA, சித்தார்த் குப்தா ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 7 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 253 ரன் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய சஞ்சு சாம்சன் 42 பந்துகளில் 89 ரன் எடுத்தார்.

இதனையடுத்து, 254 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 246 ரன் எடுத்தது. ஜேக்கப் பேத்தல் 48 பந்துகளில் 105 ரன் எடுத்தார்.

இப்போட்டியில் இந்தியாவின் சஞ்சு சாம்சன் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அஹமதாபாத்தில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதி போட்டியில் இந்தியா - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<